ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2300/20 – 2022 ඔක්තෝබර් මස 05 වැනි බදාදා – 2022.10.05
**2300/20 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை

**2022 ஆம் ஆண்டின் 143 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 68/69/பீ/640/எல்ஜீ/955.
பிர. செய. குறிப்பு இல. : BD/BW/LND/6/AQUIS/23.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", இல.1200/6,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, ஓகத்து 17 .

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், பண்டாரவெல.

2. **காணியின் விபரம்** : ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், மெதிகிந்த பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில், மஹபலட்ட கோறளே சிறு பிரிவில், ஒபடல்லகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 119 ஆம் இலக்க, 1971 பெப்புருவரி, மாச்சு ஆந் திகதிகளில் இறுதி கிராம வரைபடத்தில் துண்டு இல. 107 எனக் காட்டப்பட்டுள்ள பின்வரும் காணித் துண்டின் எல்லைகள்:

01. **துண்டு இல. 107 - ஹோப் வத்தை - விஸ்தீரணம் : 07 ஏக்கர்**

வடக்கு: துண்டு இல. 1; கிழக்கு: துண்டு இல. 1 மற்றும் வீதி; தெற்கு: வீதி; மேற்கு: வீதி மற்றும் துண்டு இல. 1.

EOG 10-0017

## திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

## 2022 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல. : 4-3/13/2020/PC/293.
பிர. செய. குறிப்பு இல. : DS/VW/LA/siddha medicine.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் இலக்க பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கட்டளையின் கீழ் 2022.03.04 ஆந் திகதிய 2269/60 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1A பக்கத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் "2021 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க கட்டளை " என்பதற்குப் பதிலாக "2022 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க கட்டளை " எனக் திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", இல.1200/6,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, ஓகத்து 22 .

EOG 10-0018

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.